1986 நவம்பர் 20]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இவை எல்லாவற்றையும் அரசாங்கம் ஆராயும்.

கும்பகோணம் தாலுக்காவில் புதிய தொழிற்சாலை.

98—(*வினா எண் 1467) திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தாலுக்காவில், ஏதேனும் புதிய தொழிற்சாலை தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) விவசாய விளைபொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை அரசு கும்பகோணம் தாலுக்காவில் தொடங்க ஏதேனும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : இல்லை. ஆனாலும் தனியார் சர்க்கரை ஆலை நிறுவ முன்வந்ததை ஏற்று அவர்களுடைய மனுவை மைய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. இதன் மூலம் 450 பேர்களுக்கு நேரிடையாகவும், 5,000 முதல் 6,000 பேர்களுக்கு மறைமுகமாகவும் வேலை கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, அரசு துவங்கவில்லை என்றாலும், தனியார் துவங்குவதற்கு அனுமதி அளித்ததாகக் கூறியதற்கு நன்றி. அப்படி சர்க்கரை ஆலை தொடங்க அனுமதி அளிப்பதாக இருந்தால், தஞ்சை மாவட்டத்தில் மூன்று சர்க்கரை ஆலைகள், திருவாரூர், மயிலாடுதுறை, குடந்தை ஆகியவற்றிலிருந்து கிடைக்கின்ற மொலாசஸிலிருந்து எரிசாராயம் செய்யலாம். கரும்புச் சக்கையையும், அதிகமாக கிடைக்கின்ற வைக்கோலையும் கொண்டு காகித ஆலை நிறுவலாம். அந்த வட்டாரம் பித்தளைக்குப் பெயர் போன காரணத்தினால் பித்தளைத் தொழிற்சாலையையும் நிறுவலாம். அதை அரசு கருத்தில் கொண்டு இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை நிறுவ முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன். கடந்த ஆண்டும் இதே பதில், இந்த ஆண்டும் இதே பதில் வந்திருக்கிறது. வருங்காலத்திலாவது புதியதாக தொழில் இல்லாத பகுதியில் தொழிற்சாலையைத் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தஞ்சை விவசாயப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால், அங்கே புதியதாக சில சர்க்கரை ஆலைகளை நிறுவலாம் என்று அரசு திட்டமிட்டிருக்கிறது. அதற்கான அனுமதியைப் பெற மத்திய அரசுக்கு மனு அனுப்பப்பட்டிருக்கிறது. மத்திய அரசு இன்னும் சர்க்கரைக் கொள்கையை வகுக்காத காரணத்தாலே சர்க்கரை ஆலைகள் நிறுவப்படுமா என்பதைப் பற்றி இந்த அரசு தெரிவிக்க இயலாத நிலையில் இருக்கிறது.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: தஞ்சை மாவட்டம் விவசாயப் பகுதி. விவசாய விளைபொருள்களைக் கொண்டு தான் அங்கே புதிய தொழிற்சாலையை ஆரம்பிக்கச் சொல்கிறேன். நான் சொல்லுகிற காகிதத் தொழிற்சாலை விவசாய விளைபொருள் களைக் கொண்டு தான் ஆரம்பிக்கப்பட வேண்டும். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் தொழிற்சாலைகளைப் பற்றிய ஒரு கருத்தரங்கை நடத்தி, தஞ்சைப் பகுதியிலே எப்படி பல தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம் என்று விவரங்களைப் பரிந் துரை செய்து அரசுக்கு அனுப்பியுள்ளதாக அறிகிறேன். இது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? தஞ்சை மாவட்டம் விவசாயப் பகுதியாக இருந்தாலும், அங்கே தொழிலை ஓரளவிற்காவது தொடங்கு கின்ற அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலே கருத்தரங்கு நடைபெற்றது. அங்கு அனுப்பப்பட்டிருக்கின்ற பகுதிகள் அரசினுடைய ஆய்வில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காகிதத் தொழிற்சாலைக்கு தஞ்சை ஆலையிலே இருக்கின்ற கரும்புச் சக்கை புகளூரில் இருக்கின்ற ஆலைக்கு எடுத்துச் செல்லப் படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவாடானை ஒன்றியம் பாண்டுகுடி, ஓரியூர் பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்

99—(*வினா எண் 7799 திரு. கா. சொர்ணலிங்கம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடானை ஒன்றியத்தில் உள்ள பாண்டுகுடி, ஓரி யூர் பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன ?

(இ) எத்தனை கிராமங்கள் பயன்பெறும் ?